

# இறைவன் இருக்கின்றானா?

நாம் வாழ்க்கையில் கருத்தில் கொள்ளக் கூடிய மிக முக்கியமான கேள்விகளில் இதுவும் ஒன்றாகும். கடவுளின் இருப்பைப் பற்றிய உங்கள் நம்பிக்கை, வாழ்க்கையின் பொருள், மனிதநேயம் மற்றும் உங்கள் தலைவிதி பற்றிய உங்கள் நோக்கை சக்திவாய்ந்த முறையில் இது பாதிக்கும்.

உலகின் சில முக்கிய மதங்கள் தனிப்பட்ட கடவுளை நம்புவதில்லை அல்லது வணங்குவதில்லை. மாறாக, கடவுளை ஒரு வகையான உயர்ந்த யதார்த்தமாக, இறுதிக் கொள்கையாக அல்லது பிரபஞ்சத்தின் முழுமையான அடிப்படையாக பார்க்கிறார்கள். கடவுளைப் பற்றிய இந்த கருத்தில், அவர் பொதுவாக மனித தேவைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து வெகு தொலைவில் ஒதுங்கி நிற்கும் ஒருவராக பார்க்கப்படுகிறார். இருப்பினும், கடவுள் நம் ஒவ்வொருவர் மேலும் தனிப்பட்ட முறையில் கரிசனை கொண்டவராக இருக்கிறார். “தந்தை தன் பிள்ளைகள் மேல் இரக்கம் காட்டுவது போல, கர்த்தர் தம்மில் அன்புகூருகிறவர்கள் மேல் இரக்கமாய் இருக்கிறார்” (சங்கீதம் 103:13) என்று வேதாகமம் சொல்கிறது.

மற்ற மதங்கள், இயற்கையின் அற்புதமான அதிசயத்தையும் சமநிலையையும் அங்கீகரித்து, பௌதிக சிருஷ்டியே கடவுளாக இருக்க வேண்டும் என்றும், நாம் காணும் அனைத்தும் கடவுளின் வெளிப்பாடு அல்லது அதில் ஒரு பகுதி என்றும் முடிவு செய்துள்ளனர். அவர் எல்லாவற்றையும் படைத்த மாபெரும் சக்தியாக இருப்பதால், ஒரு வகையில் கடவுள் எல்லாவற்றிலும் ஒரு பெரும் பகுதியாக இருக்கிறார், மேலும் வானத்தின் பரந்த விண்மீன் திரள்கள் முதல் மிகச்சிறிய அணுவின் ஒருங்கிணைந்த சக்தி வரை அனைத்தும் அவருடையதாகும். நாம் படைப்பாளரை வணங்கலாம் மற்றும் தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்ளலாம், ஏன் கடவுளுடன் ஒரு உயிருள்ள உறவை வைத்திருக்கலாம் என்று வேதாகமம் சொல்கிறது.

கடவுள் நாம் அண்ட முடியாத வெகு தொலைவில் இருப்பவர் அல்ல. கடவுள், எல்லாவற்றிற்கும் மேலானவர். அவர் தனது படைப்போடு உறவு கொள்ள விரும்புகிறார். வேதாகமத்தில் உள்ள அவருடைய வார்த்தையின் மூலம் அவர் தம்மை நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார். அவர் நம் மீது உண்மை ஆர்வம் காட்டுகிறார். இரட்சிப்பின் மூலம் நாம் அவருடன் என்றென்றும் வாழ்வதற்கு அவர் வழி செய்துள்ளார்.

நாம் அவரிடம் இருந்து பிரிந்து துன்பப்படுவதை கடவுள் விரும்பவில்லை. கடவுளையும் அவருடைய அன்பையும் அறியாமல் நம் இதயங்கள் ஒருபோதும் திருப்தியடையாது. ஏனென்றால் கடவுளே அன்பு. (1 யோவான் 4:8). அவரை அறிந்துகொள்வதற்கும், அவருடைய நித்திய ஜீவனையும் இரட்சிப்பையும் நமக்குக் கொண்டுவருவதற்கும், அவர் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு தனது சொந்த குமாரனாகிய இயேசுவை பூமிக்கு அனுப்பினார்.

இயேசு அதிசயமான முறையில் கடவுளின் ஆவியால் கருவுற்றார். கடவுளின் ஒரு உயிருள்ள பிரதிநிதியாக மாறினார். அதனால் கிறிஸ்துவின் மூலம் கண்ணுக்கு தெரியாத அந்த பெரிய படைப்பாளர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் காண முடியும். நாம் காணும் இந்த படம் அன்பே உருவாகிய கடவுளைப் பற்றியது. ஏனென்றால் இயேசு எல்லா இடங்களிலும் நன்மை செய்து, மற்றவர்களுக்கு உதவினார். மேலும் நம் அனைவருக்கும் கடவுளின் அளவு கடந்த அன்பைப் பற்றி கற்பித்தார்.

இரட்சிப்பின் நற்செய்தியை உலகுக்கு அறிவிக்கும் பணியை இயேசு முடித்தவுடன், அனைத்து மனிதகுலத்தின் பாவங்களுக்காக சிலுவையில் தனது உயிரைக் கொடுத்தார். அவரது உயிரற்ற உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குப் பிறகு, இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார். மரணத்தையும் நரகத்தையும் என்றென்றும் வென்றார்.

“ஏனெனில், தேவன் தம்முடைய ஒரே குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் இவ்வுலகை(உங்களையும் என்னையும்) நேசித்தார்” (யோவான் 3:16).” என வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளது.

கடவுள் இருக்கிறார், அவர் உங்களுடன் தனிப்பட்ட உறவில் நுழைய விரும்புகிறார், மேலும் இங்கேயும் இப்போதும் எங்கேயும், எப்போதும், என்றென்றும் என்றென்றும் உங்கள் வாழ்க்கையின் உண்மையான பகுதியாக மாற விரும்புகிறார். வேதாகமத்தில், கடவுள்,மற்றும் மனிதகுலத்தின் மீதான அவரது அன்பு,மேலும் உங்கள் வாழ்க்கைக்கான அவரது திட்டம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் படித்து அறியலாம்.

இயேசு உங்கள் இதய வாசலில் நிற்கிறார், நீங்கள் கதவைத் திறந்து உங்கள் வாழ்க்கையில் அவரை அழைப்பதற்காக காத்திருக்கிறார். (வெளிப்படுத்துதல் 3:20) இந்த ஜெபத்தை மனப்பூர்வமாக ஜெபிப்பதன் மூலம் நீங்கள் அவரை அழைக்கலாம்:

இயேசுவே, என் எல்லா பாவங்களையும் மன்னியுங்கள். நீங்கள் எனக்காக மரித்தீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் இதயத்தின் கதவைத் திறக்கிறேன், நான் உங்களை என் வாழ்க்கையில் அழைக்கிறேன். தயவு செய்து உமது அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும் என்னை நிரப்பி, உம்மை அறிந்து கொள்ள எனக்கு உதவுங்கள், சத்தியத்தின் வழியில் என்னை வழிநடத்துங்கள். ஆமென்.

© 2022 Activated
மேலும் அறிய, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும்: https://activated.org/en.